நகரவைசிய இளைஞர் தமிழ் சங்கம்
Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

V. PL. L.
KASIVISWANATHAN CHETTIA
PAGANERI.

# சின்னு தேவி

[ நாடகம் ]

எழுதியவர்:
தி. நா. சுப்பிரமணியன்

கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் : : சென்னை
1943

# நன்றி

இந்த நாடகம் முதலில் எட்டுக் காட்சிகள் கொண்டதாக எழுதப்பட்டது. அவற்றுள் ஆறு அகில இந்திய ரேடியோவின் சென்னை நிலயத்தினின்றும் 1941-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் ஒலிபரப்பப் பெற்றன. விடுபட்ட இரண்டு காட்சிகளுடன் இது பின்னர், சுதேசமித்திரன் வாரப்பதிப்பில் வெளியிடப்பட்டது. ரேடியோவில் ஒலி பரப்புவதற்கு முன் ஒத்திகை நடத்தியபோது உடனிருந்து கவனிக்கும் வசதி எனக்குக் கிடைத்தது. அதன் பயனாகச் சிறு மாறுதல்கள் ஓரிரண்டு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஒன்பது காட்சிகள் கொண்டதாகத் திருத்தப்பெற்று இந்நாடகம் இப்போது வெளிவருகிறது.

தி. நா. சு.

# பாத்திரங்கள்

**வீரநரஸிம்ஹராயர்** : *விஜயநகர ஸாம்ராஜ்யத்துச் சக்கரவர்த்தி.*

**கிருஷ்ணதேவராயர்** : *வீரநரஸிம்ஹருடைய தம்பி; மாற்றுந்தாய் வயிற்றில் பிறந்தவர். அவருக்குப் பிறகு சக்கரவர்த்தியானவர்.*

**அச்சுததேவராயர்** : *மற்றொரு தம்பி. இவரும் வேறொரு மாற்றுந் தாய் வயிற்றில் பிறந் தவர்.*

**சாளுவ திம்மாஜி** : *மஹாமந்திரி. அப்பாஜி என்று மரியாதையாக அழைக்கப்படுபவர்.*

**விருபாக்ஷ தண்டநாயகர்** : *ஒற்றர் தலைவர்.*

**திப்பாம்பா** : *வீரநரஸிம்ஹருடைய தாயார்.*

**சின்னு தேவி** : *கிருஷ்ணதேவராயர் ஆசைநாயகி. காணுல (வாணியக் குலத்து) ஸங்கா என்ற பெயர் கொண்ட ஒரு தாஸி.*

**காவலன்.**

# பீடிகை

விஜயநகர ஸாம்ராஜ்யத்தில் ஒவ்வொரு வருஷமும் நவராத்திரி விசேஷமாகக் கொண்டாடப்படுவது வழக்கம். கடைசி நாளான மஹாநவமி மிகவும் முக்கியமான தினம். அன்றைத் தினம் சக்கரவர்த்தி அரண்மனையினின்றும் நகரத்தின் வீதிகளின் வழியாக நகர்ப்புறத்தே அமைந்திருந்த மஹாநவமி மண்டபத்துக்குப் பவனி செல்வர். அந்தச் சமயம் போர்வீரர்களின் அணிவகுப்பும் நடக்கும். அந்தக் கண்கொள்ளாக் காட்சியைப் பார்த்து மகிழ நாட்டு மக்கள் பலரும் வந்து கூடுவர்.

வழி நெடுக வீதியின் இரு புறங்களிலும் போர்வீரர்களுடன் அவர்களுடைய தலைவர்கள் அணிவகுத்து நிற்பர். முதல் வரிசையில் காலாட்படையும், அதற்குப் பின்னால் குதிரைப் படையும், மூன்றாம் வரிசையில் யானைப் படையும் நிற்கும். போர்வீரர்கள் யாவரும் புத்தம் புதிய விலை உயர்ந்த ஆடைகளை அணிந்திருப்பர். கத்தி கேடயம் முதலிய ஆயுதங்களும், யானை குதிரைகளின் அம்பாரி சேணம் முதலியனவும் நன்றாகத் தேய்க்கப்பட்டுப் பளபளவென மின்னும்.

நகருக்கு வெளியே அமைந்திருந்த மஹாநவமி மண்டபம் ஜரிகை வேலைப்பாடுடன் கூடிய

பட்டு, பீதாம்பரம் முதலிய விலை மதிப்பிட முடியாத பொருள்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். அதனைச் சுற்றியும் போர்வீரர் அணி வகுத்து நிற்பர்.

சக்கரவர்த்தி அரண்மனையினின்றும் கிளம்பி மண்டபத்துக்குச் செல்லும்போது, முன்னதாக அவர்கள் குலதெய்வமான விரூபாக்ஷ ஸ்வாமியின் அம்மன் விக்கிரகம் மேள வாத்தியத்துடன் எடுத்துச் செல்லப்படும். சக்கரவர்த்தியும் ராஜ பத்தினிகளும் மற்றும் பிரதான உத்தியோகஸ்தர்களும் அம்பிகையைப் பின் தொடர்ந்து செல்வர். மண்டபத்திலே அம்பிகையின் திருவுருவத்தை இறக்கி வைத்து ஆராதனை நடைபெறும். மண்டபத்தைச் சுற்றி நகரப் பிரமுகர்களும், பிறநாட்டுத் தூதுவர்களும் சூழ்ந்திருப்பர். வாண வேடிக்கை முதலியன நடைபெறும்.

அவர்கள் மண்டபத்தில் 'அம்பு போட்டு விட்டு'த் திரும்பும் வரையில் போர்வீரர்கள் தங்கள் தங்கள் இடத்தில் கற்சிலை போல் அசையாமல் நிற்கவேண்டும். போகும்போதும் திரும்பி வரும் போதும் சக்கரவர்த்தி போர்வீரர்களைக் குறிப்பாகக் கவனித்து அவர்கள் திறமையை அறிந்து செல்வர்.

ஜனங்கள் குதூகலத்தால் ஆரவாரம் செய்து தங்கள் ராஜபக்தியை வெளிப்படுத்திச் சக்கரவர்த்தியைச் சந்தோஷிக்கச் செய்வார்கள்.

கி. பி. பதினாரும் நூற்றாண்டின் தொடக்கத்தில் விஜயநகர ஸாம்ராஜ்யத்தைப் புஜபல மஹாராயர் என்று பிரசித்தி பெற்ற துளுவ அரசர் மஹாராஜாதி ராஜ ராஜபரமேச்வர தக்ஷிணபஸ்சிம சமுத்ராதிபதி வீரப்ரதாப வீர நரஸிம்ஹராய மஹாராயர் ஆண்டுவந்தார்.

1509-ஆம் ஆண்டில் நடைபெற்ற மஹா நவமி வைபவத்துக்கு வீரநரஸிம்ஹராயரால் வர முடியவில்லை. அவர் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடந்தார். தம்முடைய பிரதிநிதியாக அவர் தம் அருமைப் புதல்வன் விட்டலதேவராயனையும், அவனுக்குத் துணைவராகத் தம்பி கிருஷ்ணதேவராயரையும் அனுப்பி வைத்திருந்தார்.

# I

**விஜயநகரத்து ராஜவீதி. மாலை நேரம்: அணிவகுப்பும் பவனியும் முடியும் சமயம்.**

*[அரசகுமாரன் விட்டலதேவராயனும், அவனைப் பின் தொடர்ந்து கிருஷ்ணதேவராயரும், அப்பாஜி என்று பிரஸித்தி பெற்ற மந்திரி சாளுவ திம்மாஜியும், மற்றும் பலரும் வந்துகொண்டிருக்கிறார்கள். ஜனங்கள் 'ஜய விஜயீ பவ', 'கிருஷ்ணதேவராய மஹாராயருக்கு ஜய' என்று கூச்சல் போடுகிறார்கள்.]*

**கிருஷ்ணதேவராயன்:** *அப்பாஜி! இதென்ன கூச்சல்? இவ்விதம் ஆரவாரம் செய்யாமல் ஜனங்களை அமைதியாக இருக்கச் சொல்லுங்கள்.*

**திம்மாஜி:** *பிரபோ! குடிமக்கள் மனத்தை, அவர்கள் அடைந்துள்ள சந்தோஷத்தை, யார் கட்டுப்படுத்த முடியும்? ஆற்றின் ஓட்டத்தைத் தடுக்கலாம்; பெருவெள்ளத்துக்கு அணை போட முடியுமா?*

**கிருஷ்ண:** *அதுவும் முடியாததன்று; முன்னதாகவே ஆலோசனை செய்தால் அதைத் தடுத்து விட முடியும்.*

**திம்மாஜி:** *அது எவ்விதமாயினும் ஜனங்கள் தங்கள் மீது கொண்டுள்ள விசுவாசத்தைக்*

கொஞ்சமும் தடுக்க முடியாது. இந்த அணி வகுப்பில் தாங்கள் நடுநாயகமாக விளங்குவதைக் கண்டதும் அவர்கள் என்றுமில்லாத ஆனந்தத்தைப் பெற்றுவிட்டனர்.

**கிருஷ்ண :** நான் என்ன நடுநாயகன்! இளவரசர் விட்டலதேவர் உத்ஸவத்தை நடத்தி வைத்தார். நான் அவருக்கு உதவியாக இருந்து வந்தேன். அவ்வளவுதானே?

**திம்மாஜி :** ராஜாங்க உடுப்பையே ஒரு பாரமாகக் கருதும் பச்சைக் குழந்தை உத்ஸவத்தை நடத்திவைக்கவாவது!......

**கிருஷ்ண :** [இடைமறித்துச் சிறிது கோபத்துடன்] அப்பாஜி, என்ன இது? புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? அரசகுலத்தில் பிறந்த ஒவ்வொருவனும் - பச்சைக் குழந்தையானாலும் சரி, தள்ளாத கிழவனானாலும் சரி - தன் கௌரவத்தையும் அந்தஸ்தையும் விட்டுக் கொடுக்கமாட்டான்.

**திம்மாஜி :** [அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல்] நான் சொல்வது உங்கள் மனத்திற்குப் பிடிக்காததாக இருக்கலாம். ஆயினும், அது உண்மை. ஜனங்கள் மட்டுமல்ல, போர் வீரர்களும் அவ்விதம் கருதவில்லை. அவர்கள் இளவரசரை ஒரு பொம்மையாகவே மதித்து வந்தார்கள். தங்களையே பிரதான புருஷராகக் கொண்டிருந்தார்கள்.

**கிருஷ்ண :** *அப்பாஜி, நீங்கள் அவ்விதம் கொண்டீர்கள். அதனால் மற்றவர்களும் அவ் விதமே மதித்துவிட்டார்கள் என்று உங்களுக் குத் தோன்றுகிறது போலும்!*

**திம்மாஜி :** *பிரபோ, தாங்கள் ஏன் அதை மறைக்கிறீர்கள்? ஊர்வலத்தின் போது போர் வீரர்கள் தங்களுக்கே மரியாதை செய்வதைக் கண்டு, தாங்கள் சற்று விலகி மறைவாகப் பின் தங்கியதையும், அவர்கள் அப்போதும் இளவர சரை விட்டுத் தங்களையே வணங்கித் தங்கள் புகழையே கொண்டாடியதையும் நான் கவனிக்க வில்லை என்று நினைக்கிறீர்கள்?*

**கிருஷ்ண :** *சக்கரவர்த்தியாகிய என் தமைய னார் உடல் நலம் இன்றிப் படுத்த படுக்கையாக இருக்கையில் அவ்விதம் நினைப்பதும் மகாபாபம். ......சரி, ஜனங்கள் ஆரவாரம் இப்போது கொஞ்சம் அடங்கியிருக்கிறது. நாம் போவோம்.*

**திம்மாஜி :** *சித்தம்.*

*[இருவரும் செல்கிறார்கள். மறுபடியும் ஜனங்கள் ஆரவாரம் செய்கின்றனர். 'ஜய விஜயீ பவ', 'கிருஷ்ணதேவ மஹா ராயருக்கு ஜய' என்ற கோஷம் கிளம்பி ஒலிக்கிறது.]*

## II

**விஜயநகரத்து ராஜவீதியில் காணுல ஸங்காவின் மாளிகை. மாலை நேரம்.**

*[மாளிகையின் முன்புறத்து அறையில் பச்சையும் நீலமும் கலந்த நிறத்தையுடைய ரத்தினகம்பளம் ஒன்று விரிக்கப்பட்டிருக்கிறது. அங்கங்கே ஓரிரண்டு திண்டுகள் கிடக்கின்றன. நடுவில் சின்னு தேவி என்ற செல்வப் பெயரைத் தாங்கிய காணுல ஸங்கா கையில் வீணையுடன் உட்கார்ந்திருக்கிருள். அவளுக்குச் சுமார் இருபது வயசு இருக்கும். நல்ல சரீரக்கட்டும் அழகும் வாய்ந்த அவளுடைய குரல் கேட்பவர் பிரமிக்கத்தக்கதாக இருக்கிறது.*

*அறையின் நடுவில் கண்ணுடியால் செய்யப்பட்ட மணிவிளக்கு, சங்கிலியால் தொங்கவிடப்பட்டு அறை முழுவதையும் நன்ருகப் பிரகாசப்படுத்திக்கொண் டிருக்கிறது. வெளியிலே உத்ஸவம் பார்க்க வந்த ஜனங்களின் ஆரவாரம் ஓய்ந்த பாடில்லை.*

*சின்னு தேவி அதைக் கவனிக்காமல் வீணையை மீட்டிப் பாடுகிருள்.]*

**சின்னு:**

"என்புருகி இனவேல் நெடுங்கண்கள்
இமைபொருந்தா பல நாளும்
துன்பக் கடல்புக்கு வைகுந்த னென்பதோர்
தோணிபெரு துழல்கின்றேன்

அன்புடையாரைப் பிரிவுறு நோயது
நீயும் அறிதி குயிலே
பொன்புரைமேனிக் கருளக் கொடியுடைப்
புண்ணியனை வரக் கூவாய்.''

[பின்புறமாக அடிமேல் அடிவைத்து மெதுவாக யாரோ வந்து அவள் கண்களைப் பொத்துகிருர். அதனுல் திடுக்கிட்ட அவள் வீணையினின்றும் கையை எடுத்துவிடுகிருள். பாட்டும் சட்டென்று நின்று விடுகிறது.]

யார் அது? தோழி, கையை எடு......... என்ன, சொன்னுல் கேட்க மாட்டாயா?

[கையைப் பிடுங்கி உதறித் தள்ளுகிருள். அவள் கையில் அணிந்திருந்த வளையல்கள் குலுங்கும் சப்தம் கணீர் என்று ஒலிக்கிறது. தன் கண்ணைப் பொத்தியவர் யார் என்பதை அறியத் திரும்பிப் பார்த்த அவள் திடுக்கிட்டுப் போகிருள்.]

யார் அது? சக்கரவர்த்தியா?.........

**கிருஷ்ண :** சின்னு, என்னை ஏன் இப்படிப் பரிகாசம் செய்கிருய்?

**சின்னு :** பரிகாசம் ஒன்றும் இல்லையே! தாங்கள் இனிச் சக்கரவர்த்தி; நான் குடிமக்களுள் ஒருத்தி; அப்படித்தானே?

**கிருஷ்ண :** [சற்று வருத்தத்துடன்] நீ கூடவா?

**சின்னு :** இல்லை, இல்லை.........கார்த்திகைப் பிறைபோல இருக்கிறதே தங்கள் வரவு? என்னை மறந்துவிட்டீர்கள் என்றல்லவோ நினைத்

தேன்? என்ன மாதவம் செய்தது இச்சிறு குடில்......

கிருஷ்ண: [வாக்கியத்தை முடிக்க விடாமல்] நானு? உன்னை மறந்துவிடுவதா?

சின்னு: ஏன், முன்பெல்லாம் தாங்கள் தினம் ஒரு தடவையாவது இவ்விடம் வருவீர்கள். இப்பொழுதோ......கடைசித் தடவையாகத் தங்களைப் பார்த்து இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டது......ஆனல் அப்போது தாங்கள் வெறும் ராஜகுமாரர்......இப்பொழுதோ......

கிருஷ்ண: என்ன வந்துவிட்டது எனக்கு?

சின்னு: ஏன்? இளவரசர், ராஜப்பிரதிநிதி... ...நாளைக்குச் சக்கரவர்த்தி.

கிருஷ்ண: எனக்கு ஒரு பதவியும் வேண்டாம். என்னை இருக்கிறபடியே விட்டுவிட்டால் போதும்.

சின்னு: இவை யாவும் வெறும் பேச்சு. நாளைக்குப் பதவி வந்துவிடட்டும். அப்புறம் என்னை......

கிருஷ்ண: [இடைமறித்து, மிக்க வருத்தத்துடன்] சின்னு, நான் உனக்கு என்ன குற்றம் செய்தேன்? நீ ஏன் இப்படித் துன்புறுத்துகிருய்? நான் ஒரு கைதி என்பதை நீ அறியாயா? ராஜ குடும்பத்தில் பிறந்ததால் சிறைவாசமின்றித் தப்பியிருக்கிறேன், அவ்வளவுதான். தவிர, சுயேச்சை உண்டா? இந்த நகரத்தை விட்டு

நான் வெளியில் போக மன்னர் அனுமதிப்பாரா? வெளியில் ஜனங்கள் சந்தேகம் கொள்ளாமல் இருப்பதற்காக, ஏதோ ஸம்பிரதாயத்தை அனுசரித்து அரசாங்கத்தில் எனக்கு மரியாதை காட்டி வருகிறுர்கள். இப்பொழுது நீயும்......

சின்னு: [கண்களில் நீர் துளிக்க] மஹாராஜா, மன்னிக்கவேண்டும். தங்கள் மனம் நோவ நான் தவறு இழைத்திருந்தால் அதைப் பொருட்படுத்தக்கூடாது. ஏதோ விளையாட்டாகக் கூறிவிட்டேன்......ஒன்று மட்டும் சொல்லுகிறேன். தாங்கள் கூறியவை யாவும் இன்றுவரையில் உண்மையே......ஆனுல் சற்று முன் மஹாநவமி உத்ஸவத்தில் நிகழ்ந்தவற்றை நான் அறிவேன். ஊர்வலம் வரும்போது பொதுஜனங்கள் தங்களையே வணங்கி மரியாதை செய்து ஆரவாரித்தார்கள். இளவரசர் விட்டலரைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. நோயால் வருந்தும் சக்கரவர்த்தி கண் மூடவேண்டியதுதான் தாமதம்; சிங்காதனம் உங்களுடையது.

கிருஷ்ண: நான் அதை விரும்பினுல்தானே? ......உலகத்தையே துறந்துவிட்டால்?

சின்னு: ஓஹோ! அந்த யோசனைதான் இந்தப் பக்கமே திரும்பவில்லையோ? அந்த எண்ணத்தை மட்டும் விட்டுவிடுங்கள். நீங்கள் எங்கே போனுலும், எப்படியிருந்தாலும் நான் உங்களை விடமாட்டேன்; பின்தொடர்ந்தே வருவேன்.

**கிருஷ்ண :** சின்னு! நான் இங்கே வருவதற்கு ஒவ்வொரு நாளும் எவ்வளவு துடித்துக் கொண்டிருந்தேன், தெரியுமா? சக்கரவர்த்தி படுத்த படுக்கையாகக் கிடக்கிறார். அவருக்குப் பக்கத்தில் இருந்து உதவி செய்வதற்கு என்னை யும் அப்பாஜியையும் தவிர வேறு யார் உண்டு? அரசர் ஆணையை நிறைவேற்றப் பலர் காத்துக் கொண்டிருப்பது உண்மையே. இருந்தாலும் அவர்கள் யாவரும் பிரதி உபகாரத்தை எதிர் பார்ப்பவர்களே; சுயநலவாதிகள். அவர்கள் அன்றி உண்மையாய் அரசருடைய நன்மையை உத்தேசித்து, அவருடைய உடல்நிலையைக் கவனித்து அதற்குத் தக்கபடி நடப்பவர் கள் அரண்மனையிலேயே இல்லை. ஒவ்வொரு நாளும் நான் இவ்விடம் வருவதற்கு முயன்று பார்த்தேன். ஆனால் சென்ற இரண்டு மாதங்க ளாகத் தூங்குவதற்குக்கூடப் பொழுது கிடைக்க வில்லையே.

**சின்னு :** அப்படியிருக்க நீங்கள் ஏன் இங்கே வந்தீர்கள்? உங்கள் உடல்நிலையைக் கவனித்துக் கொள்ள வேண்டாமா? [சற்று அவரை உற்றுப்பார்த்து அவரது தோற்றத்தால் கவலை கொண்டவளாகி]......நான் முதலில் கவனிக்க வில்லையே; உங்கள் கண்கள் எப்படிக் கலங்கிக் கிடக்கின்றன? தாங்கள் கட்டாயம் கொஞ்சம் சிரம பரிகாரம் செய்துகொள்ள வேண்டும்.

**கிருஷ்ண:** அது சரிதான்; ஆனால் பொழுதைத் தான் காணோம்......[ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு] உம்......உன்னையும் அப்பாஜியையும் தவிர, எனக்கு இந்த ஆறுதல்கூடச் சொல்பவர் இல்லையே! அப்பாஜியோ எப்போதும் ராஜீய வியவகாரங்களின்மீதே கண்ணாக இருப்பவர். அவர் என்னை எங்கே கவனிப்பார்?

**சின்ன:** அப்படியானால் இங்கேயே தங்கி விடுங்கள். நான் தங்களுக்கு வேண்டிய பணி விடை செய்கிறேன்.

**கிருஷ்ண:** எனக்கும் அது சம்மதமே. ஆனால்...

**சின்ன:** ஆம், ஆனால் அது ராஜவம்சத்தின் கௌரவத்துக்கு ஏற்றதல்ல, அல்லவா?

**கிருஷ்ண:** சின்ன, நீ அதைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் குத்திக் காட்டாதே. நீ தாஸியானால் என்ன? குணத்திலும் நடத்தையிலும் ராஜகுடும்பத்தில் பிறந்தவர்களைவிடச் சிறிதாவது குறைந்தவளா? எந்தக் குலத்தைச் சேர்ந்தவராயினும் மனம் ஒன்றுபட்டுக் காதலை அடைந்தால்......

**சின்ன:** [வேகமாக] அது உண்மையாயின் நீங்கள் இங்கே தங்குவதற்கு என்ன தடை?

**கிருஷ்ண:** நான் இங்கே தங்கிவிட்டால் அரண்மனையில் உள்ளவர்கள் வேறு விதமாக நினைத்துவிடுவார்கள். அரசுரிமைக்கு ஆசைப் பட்டு நான் அதை அடையச் சூழ்ச்சிகள்

செய்யத் தலைமறைவாக இருக்கிறேன் என்ற அபாண்டமான பொய்யைக் கிளப்பி விடுவார்கள். என் அண்ணன் உடம்பு கொஞ்சம் குணமாகட்டும். நான் முன்போல இங்கேயே வந்து தங்கிவிடுகிறேன்.

சின்னு: நான்தான் முதலிலேயே சொன்னேனே. சக்கரவர்த்திக்கு இது அந்திய காலம். அவர் இனிமேல் பிழைத்து எழுந்திருக்கமாட்டார். தாங்களே அவருக்கு அடுத்த சக்கரவர்த்தி.

கிருஷ்ண: அப்படியானுல் மிகவும் நல்லதாகப் போயிற்று. நம்மை யாரும் அப்பொழுது பிரிக்க முடியாது.

சின்னு: நன்ருகச் சொன்னீர்கள். அப்போது தாங்கள் என்னை லக்ஷ்யம் செய்வீர்களா, என்ன?

கிருஷ்ண: சின்னு, எனக்கு எத்தகைய பதவி வந்தாலும் சரி, நான் உயிருடன் இருக்கும் வரையில் உன்னைக் கைவிட மாட்டேன்; மறக்க மாட்டேன்; விட்டுப் பிரிய மாட்டேன். இது சத்தியம்......போதுமா?

## III

**விஜயநகர அரண்மனையின் அந்தப்புரம் : நள்ளிரவு.**

*[சக்கரவர்த்தி வீரநரஸிம்ஹராயர் ஒரு மஞ்சத்தின் மீது படுத்திருக்கிறார். பக்கத்திலே ஒரு சிறு கட்டிலின் மீது தட்டத்தில் மருந்து வகைகளும், பழங்களும், வேறு ஆகாரவகைகளும் வைக்கப்பட்டுள்ளன. அறையின் வெளியே போர்வீரன் ஒருவன் காவல் புரிந்து வருகிறான்.*

*மங்கலான வெளிச்சம் சூழ்ந்திருக்கும் அறையில் சக்கரவர்த்தி தூங்கும் நள்ளிரவில் யார் வரப் போகிறார்கள்? அவருடைய தாயார் திப்பாம்பாவின் அருவம் தோன்றுகிறது.]*

**திப்பாம்பா:** ஏண்டாப்பா! இப்போது எப்படி இருக்கிறது?

**வீரநர:** கொஞ்சம் தேவலை, அம்மா! இப்பொழுது மூச்சுத் தாராளமாக விட முடிகிறது. உடம்புமட்டில் கொஞ்சம் பலஹீனமாக இருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் தெரியவில்லை.

**திப்பாம்பா:** விட்டலன்தான் என் வயிற்றில் பாலை வார்க்கவேண்டும். என் வயிறு என்ன பாடு பட்டது தெரியுமா? [சிறிது நேரம் குறிப்பாகத் தன் மகனைக் கவனித்துவிட்டு] ஏண்

டாப்பா! உடம்பு தேவலே என்று சொல்லு கிருயே! கண்களில் அசடு தட்டுகிறதே. இப்போது வெளியில் போன வைத்தியர் முகமும் சரியாக இல்லேயே?

**வீரநர:** அதெல்லாம் ஒன்றுமில்லே, அம்மா. உடல் நெற்றுப் போலக் கலகலப்பாக இருக்கிறது.

**திப்பாம்பா:** எனக்கு என்னவோ இன்னும் கவலேயாகவே இருக்கிறது. ஒருகால் அணேயும் விளக்கின் பிரகாசமாக......

**வீரநர:** அப்படி ஏன் வீணுகப் பிராந்தி அடைகிருய்?

**திப்பாம்பா:** [ஒரு பெருமூச்சு விட்டு] உம்... நெருப்பென்ருல் வாய் வெந்து போய்விடாது...... காலதேசவர்த்தமானங்களேப் பார்க்கும்பொழுது ஈசுவரன் என் தலேயில் எப்படி எழுதியிருக்கிருனே என்ற ஏக்கந்தான்........ஆமாம்... இன்றைக்கு நடந்த விஷயத்தைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பாயே!

**வீரநர:** எது?

**திப்பாம்பா:** அதுதான், கிருஷ்ணன் விஷயமாக நடந்த ஆரவாரம்.

**வீரநர:** ராஜாங்க விஷயங்களில் நீ ஏன் அம்மா தலேயிட்டுக்கொண்டு கஷ்டப்படுகிருய்?

**திப்பாம்பா:** [தழுதழுத்த குரலில்] ஆமாம் அப்பா, ஆமாம்! நீ அப்படித்தான் சொல்லு

வாய். மந்திரி திம்மாஜியின் உபதேசம். உன் தகப்பனாராக இருந்தால் இப்படிச் சொல்லு வாரா?......நாளைக்கு உனக்கு ஏதாவது காலைத் தலையை வலித்துக் கிருஷ்ணன் ராஜாவாக வந்து விட்டால்......என்னிடம் ஊழியம் செய்து வந்தாளே, அவளுக்கு நான் வேலைக்காரி ஆக வேண்டும், இல்லையா? ஒரு காலத்தில் எனக்குத் திவட்டி பிடித்து வழி காட்டிச் சென்ற நாகம்மா அப்பொழுது அரண்மனையில் சர்வாதிகாரம் செலுத்துவாள். அவள் பிள்ளை கிருஷ்ணன் தானே அப்பொழுது ஸாம்ராஜ்யச் சக்கரவர்த்தி? ......நான் அவளுக்குக் குற்றேவல் செய்ய வேண்டும். ஒரு ராஜ குடும்பத்தில் பிறந்து மற்றொரு ராஜனுக்கு வாழ்க்கைப்பட்டு, சக்கர வர்த்தியான உன்னைப் பெற்றெடுத்த நான் அத்தகைய மானங் கெட்ட வாழ்க்கையை நடத்தவேண்டும்! நீயே யோசித்துப் பார்...... அப்படி உயிர் வாழ்வதைக் காட்டிலும் உன் கண் முன்பாகவே நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாமே?

**வீரநர:** *[வருத்தத்துடன்]* ஏன் என்னை இப்படிக் கழுகுமாதிரிக் கொத்திப் பிடுங்குகிறாய்?

**திப்பாம்பா:** *[கோபத்துடன்]* நான் சொல் வது உனக்கு அப்படித்தான் படும். எல்லாம் அந்த உபதேசம்...கிருஷ்ணதேவன் உயிருடன் இருக்கும் வரையில் உன்னுடைய வம்சம்

விளங்கப் போவதில்லை. இதை நிச்சயமாக வைத்துக்கொள். [மறைகிருள்.]

**வீரநர:** அம்மா, அம்மா!......போய்விட்டாளே.

[திடுக்கிட்டுக் கண்விழித்து நாற்புறமும் சுற்றிப் பார்க்கிருர். எங்கும் நிச்சப்தம் குடியிருக்கிறது.]

என்ன கனவு இது? என் தாய் இறந்து எத்தனை வருஷங்கள் ஆகின்றன! இப்பொழுது அவள் வந்து சொல்லவாவது! மனத்தின் பிரமையா....அல்லது இன்றைத் தினத்தில் நாம் பூஜை செய்யும் வீரலக்ஷ்மிதானு?

இனி அதிக நேரம் பிழைத்திருக்க முடியாது என்றே தோன்றுகிறது......நமக்குப் பின் பட்டத்துக்கு.........சாளுவ வம்சத்து ராஜ குமாரர்களை நாம் அனுப்பிய மாதிரி நம்முடைய குழந்தை........சேச்சே......அது கூடவே கூடாது. அவள் சொன்னது உண்மைதான்......கிருஷ்ணன் உயிருடன் இருக்கும் வரையில்......யார் அங்கே?

[காவலன் வருகிருன்.]

**காவலன்:** புத்தி, புத்தி.

**வீரநர:** மந்திரி திம்மாஜியை உடனே அழைத்து வா.

**காவலன்:** புத்தி, புத்தி.

[போகிருன்.]

**வீரநர:** இவ்வளவு நாட்களாக நாம் இதைச் செய்யாது விட்டிருக்கக் கூடாது. முளையிலேயே கிள்ளி இருக்க வேண்டும்.

[மிக்க பிரயாசையுடன் கடிதத்தில் உத்தரவு எழுதுகிறார். திம்மாஜி பிரவேசம்.]

**திம்மாஜி:** ஜய விஜயீ பவ.

**வீரநர:** திம்மாஜி, எனக்கு மரணம் கிட்டி விட்டது. இனி அதிக நாழிகை ஜீவித்திருக்க மாட்டேன். நான் இறந்து போவதைக் குறித்து வருந்தவில்லை......எனக்குப் பிற்காலம் ராஜ்யம் என்னவாகும் என்பதை எண்ணும்போதுதான் எனக்கு இறப்பதற்குத் தைரியம் உண்டாக வில்லை........குழந்தை சிறுவனாக இருக்கிறான் ......கிருஷ்ணனோ நான் எப்போது கண்ணை மூடப்போகிறேன் என்று காத்துக்கொண் டிருக்கிறான்......ராஜ்யத்தை நான் உங்கள் வசம் ஒப்பித்துவிட்டேன். எனக்குப் பிற்காலம் என் குழந்தைக்கு முடி சூட்டிவைப்பது உங்கள் பொறுப்பு......உம். [பெருமூச்சு விடுகிறார். பிறகு திடீரென்று வெறி கொண்டவர் போல்] கிருஷ்ணனுக்கு ஆசாபங்கம் ஏற்பட்டால்தான் இது கைகூடும்......அதற்கு ஒரே வழிதான் உண்டு......அவன் பார்வை இழந்து அந்தகனாகி விடவேண்டும்......ஆம், கிருஷ்ணன் கபோதி யாகி விடவேண்டும். இல்லாவிட்டால் என் குழந்தை சிங்காதனம் ஏறமுடியாது. கிருஷ்ணன் கண்ணை உடனே கொண்டு வரவேண்டும். அது

உங்களால்தான் ஆகும். அதைப் பார்த்த பிறகு தான் என் ஆவி உடலை விட்டு நீங்கும். திம்மாஜி, நீங்கள் உடனே அதைச் செய்து முடிக்க வேண்டும். இது என் ஆணை... [மூர்ச்சை அடைகிறார்.]

**அப்பாஜி:** [பிரமை கொண்டவராக] அடாடா! சக்கரவர்த்தி மூர்ச்சை யடைந்து விட்டாரே! [உரத்த குரலில்] யார் அங்கே?

[வேலைக்காரர்கள் பலர் ஓடி வருகின்றனர். அவர்களுள் ஒருவனைப் பார்த்து,]

ஓடிப் போய் உடனே வைத்தியரை அழைத்து வா.

[பலர் சக்கரவர்த்திக்குச் சைத்தியோபசாரங்கள் செய்கின்றனர்.]

**திம்மாஜி:** [வெளியில் நடந்துகொண்டே] உம்......இவ்வளவு தூரம் போய்விட்டதா?...... என் குழந்தை கிருஷ்ணன் கண்களை நானே பிடுங்கிக்கொண்டு வந்து காண்பிக்கவேண்டுமா? [உரக்கச் சிரித்து] பலே!

# IV

**அரண்மனையுள் கிருஷ்ணதேவர் வசிக்கும் மாளிகை: நள்ளிரவு.**

[அறையில் கிருஷ்ணதேவர் தனியாக உலவிக் கொண்டிருக்கிறார். அவருக்குத் தூக்கம் வரவில்லை.

மஞ்சத்தில் விரித்த படுக்கை அப்படியே கிடக்கிறது. தீபம் தாங்கிய பெண்ணுருவத்தின் கையில் ஒரு மங்கலான அகல் விளக்கு எரிந்துகொண்டிருக்கிறது.]

**கிருஷ்ண:** இது என்ன உலகம்! எல்லாம் மாயை.........

[மந்திரி திம்மாஜி நடைப்பிணம் போல் மெதுவாக வந்து உள் நுழைகிறார். அவரைப் பார்த்தால் எங்கே போகிறார், எதற்காகப் போகிறார் என்ற உணர்ச்சிகளே இல்லாதவர் போலத் தோற்றுகிறது.]

அப்பாஜி, வாருங்கள், வாருங்கள். கிருஷ்ணன் நமஸ்காரம் செய்கிறேன்.........

[திம்மாஜி திரும்பி உடனே ஆசீர்வாதம் செய்யவில்லை.]

ஏது, இந்த நடுநிசியில்......தங்கள் முகம் ஏன் இவ்விதம்......?

**திம்மாஜி:** [தூக்கத்தினின்றும் விழித்தவர் போல] தீர்க்காயுஷ்மான் பவ!......

**கிருஷ்ண :** தங்கள் முகம் ஏன் இப்படி வாடி யிருக்கிறது? சக்கரவர்த்திக்கு உடம்பு எப்படி இருக்கிறது?

**திம்மாஜி :** எப்படி இருந்தால் என்ன? அவர் இனிப் பிழைக்க மாட்டார். மஹாராஜா மரணு வஸ்தையில் இருக்கிருர்......

**கிருஷ்ண :** ஐயோ, பாவம்! அப்படி யிருக்கத் தாங்கள் ஏன் பக்கத்தில் இல்லாமல் வந்து விட்டீர்கள்?

**திம்மாஜி :** [நேராக இதற்குப் பதில் கூருமல்] அவருக்கு அடுத்த வாரிசைப்பற்றியே எங்கும் கவலே. யார் பட்டத்துக்கு வரப் போகிருர் என்பதைப் பற்றியே எல்லோருக்கும் சந்தேகம்.

**கிருஷ்ண :** அதாவது, சக்கரவர்த்தியின் பிள்ளேக்குப் பதிலாகவா? கர்த்தாவாகவா?

**திம்மாஜி :** இல்லே, சக்கரவர்த்தியாகவே......

**கிருஷ்ண :** அடுத்த வாரிசு சக்கரவர்த்தியின் குமாரன், இளவரசன் விட்டலன்தானே? அதில் என்ன சந்தேகம் இருக்கிறது?

**திம்மாஜி :** அவன் குழந்தையாயிற்றே. விஜய நகர ஸாம்ராஜ்யத்துக்கும் குழந்தை அரசர் களுக்குந்தான் எப்போதும் பொருத்தமே இல்லேயே! அன்றி, தந்தையை அடுத்து மகன் பட்டத்தை அடையாவிட்டால், பிறகு அவ னுக்கு ஒருபொழுதுமே கிடையாதே.

**கிருஷ்ண :** வாஸ்தவந்தான். குழந்தைப் பருவத்திலிருக்கும் அரசர்கள் தக்க வயதை அடைவதற்குள் எப்படியோ இறந்துவிடுகிறார்கள். ஆனால் தங்கள் பாதுகாப்பு இருந்தால் கூடவா அவனுக்கு அப்படி நேரிடும்? ஒரு காலும் நேராது.

**திம்மாஜி :** பிரபோ......அது வேறு விஷயம்... சக்கரவர்த்தியவர்கள் என்ன நினைக்கிறார் தெரியுமா?

**கிருஷ்ண :** [பரபரப்புடன்] எனக்கு ராஜ்யம் வேண்டாம். அப்பாஜி, உங்களை நான் வேண்டிக் கொள்ளுகிறேன். எனக்கு அந்தப் பதவியை அளித்துவிடாதீர்கள். என்னை இப்படியே வைத்திருந்தால் போதும்.

**திம்மாஜி :** அரசருடைய உத்தரவு தாங்கள் நினைப்பது போல் இல்லை. அதை நான் எவ்விதம் சொல்லுவேன்!......சற்று முன் அரசர் என்னை அழைத்தார். ஏதேதோ பேசினார். புத்தி பிசகிவிட்டதோ என்றுகூட நினைத்தேன். ஆனால் அவர் சொன்னவை யாவும் கோவையாகவே இருந்தன. முடிவில் ஓர் உத்தரவை எழுதி என்னிடம் கொடுத்தார். நான் அதை எப்படித் தங்களிடம் சொல்லுவேன்?

**கிருஷ்ண :** என்ன அது?

**திம்மாஜி :** சக்கரவர்த்தியே வாயால் சொல்லக் கூசியதால் எழுதிக் கொடுத்தார் போலும்! தாங்களே படியுங்கள்.

**கிருஷ்ண:** [படிக்கிறார்] 'கிருஷ்ணதேவன் சிம்மாசனத்தின் மேல் ஆசை கொண்டிருக்கிறான். அவனை அந்தகனுக்க வேண்டும்.'

[திம்மாஜி உணர்ச்சி மேலிட்டுக் கிருஷ்ண தேவ ராயரைக் கட்டிக்கொண்டு புலம்புகிறார்.]

அப்பாஜி, இதற்காகவா வருத்தப்படுகிறீர்கள்? ஸாம்ராஜ்யத்தை ஆளும் சக்கரவர்த்திப் பதவியில் மோகம் இருந்தால் அல்லவோ இதைப் பற்றி எனக்குக் கவலை? தாங்கள் ஆதியில் எனக்கு உபதேசித்த வேதாந்தசாரம் என்ன? உலகத்தில் யாவும் பொய் அன்றோ? தாங்கள் வரும் பொழுதும் நான் இதையேதான் யோசித்துக் கொண்டிருந்தேன். எனக்கு இந்த ராஜ்யத்தில் சிறிதும் ஆசையில்லை. உலகபந்தத்தை அறுத்து எறிந்து முக்திமார்க்கத்தையே கைக்கொள்ள விரும்புகிறேன். அதற்குத் தங்களுடைய ஆசீர்வாதத்தையும் உத்தரவையுமே எதிர்பார்க்கிறேன்........உத்தரவு கொடுங்கள். இப்போதே துறவறம் மேற்கொண்டு வெளியே போய்விடுகிறேன்.

**திம்மாஜி:** பிரபோ, நல்ல காரியம் செய்யப் பார்க்கிறீர்கள்! அதற்கு ஒருகாலும் நான் இடங் கொடேன். நாட்டுமக்கள் தங்களையல்லவோ நம்பி யிருக்கிறார்கள்? தாங்கள் செய்ய வேண்டிய காரியங்கள் அநேகம் இருக்கின்றன. இந்த ராஜ்யபாரத்தை ஏற்றுக்கொள்வதற்குத் தாங்களே தகுதி வாய்ந்தவர்.

**கிருஷ்ண:** அப்படியானால் சக்கரவர்த்தியின் உத்தரவு?

**திம்மாஜி:** தங்கள் தாயார் அரண்மனையில் பணிவிடை செய்து வந்தவராம். "என் தாய் அதிகாரம் செலுத்திய அரண்மனையில் அவளுக்குத் தீவட்டி பிடித்து வேலை செய்தவள் பிள்ளையா அரசு புரிவது?" என்று கேட்டார் அரசர்.

**கிருஷ்ண:** [கோபத்தோடு] என் தாயாரை அவமதித்துப் பேசினாரா?......[உரக்கச் சிரித்து] அவர் மகன் பட்டத்துக்கு வருவதைத் தடுக்காமலிருப்பதற்காக என் கண்களை அவிக்க வேண்டுமா?

**திம்மாஜி:** ஆம். அதற்கு ஏதாவது ஒரு வழி தேடவேண்டும். பார்க்கலாம்....ஒன்றுமட்டும் வேண்டிக்கொள்ளுகிறேன். எவ்வளவு முக்கியமான காரியமானாலும் சரி, தாங்கள் இந்த அறையை விட்டு வெளியில் போகக் கூடாது. யாராக இருந்தாலும் சரி, சின்ன தேவியாக இருந்தாலும் சரி, தாங்கள் ஒருவரையும் என்னுடைய அனுமதியில்லாமல் பார்க்கக்கூடாது. நான் அவ்விதம் வேண்டிக்கொள்வதை வேறு விதமாக நினைத்துக்கொள்ளாதீர்கள். மன்னிக்கவேண்டும். ........சரி, நேரமாகிவிட்டது; சக்கரவர்த்தியை உடனே போய்ப் பார்க்கவேண்டும்........வருகிறேன்.

[திம்மாஜி போகிறார்.]

## V

**ராஜவீதியில் பிரதம மந்திரி சாளுவ திம்மாஜியின் மாளிகை: காலை.**

*[திம்மாஜி தம்முடைய பூஜை முதலிய தினசரி நியமங்களை முடித்துக்கொண்டு அரசாங்கக் காரியத்தைப் பார்ப்பதற்காக மாளிகையின் முன்புறத்து அறையினுள் நுழைகிறார். அப்போது விடிந்து நாலு நாழிகைப் பொழுதிருக்கும். அதுவரையில் வெளியே மாளிகையைக் காவல் புரிந்து நின்ற சேவகன் அவர் அறைக்குள் வந்த விஷயத்தை அறிந்து உள்ளே நுழைகிறான்.]*

**காவலன்:** *பிரபோ!......மஹாராஜா அச்சுததேவராயர் வருகிறார்.*

**திம்மாஜி:** *சரி.*

**காவலன்:** *புத்தி, புத்தி.*

*[வெளியே போகிறான். அச்சுததேவராயர் வருகிறார். திம்மாஜி அவரை எதிர்கொண்டு அழைத்து வருகிறார்.]*

**திம்மாஜி:** *வரவேண்டும், வரவேண்டும்...... பிரபோ, ஏன் இவ்வளவு தூரம்?...சொல்லி அனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே!....*

**அச்சுததேவராயர்:** *இல்லை...தங்களைப் பார்க்கத்தான் வந்தேன்.*

**திம்மாஜி:** சித்தம்......[ஒரு பெருமூச்சு விட்டு] சக்கரவர்த்தி, தங்கள் தமையனார் வீரநரஸிம்ஹராயமஹாராயருடைய முடிவு இவ்வளவு சீக்கிரத்தில் ஏற்பட்டுவிடும் என்பதை யாரும் எதிர்பார்க்கவில்லை. அவர் நோய்வாய்ப்பட்டுப் படுத்தது அவருடைய மரணாவஸ்தையாகவே நேரிட்டுவிட்டது......

**அச்சுத:** ஆமாம்......அவர் இன்னும் சிறிது காலம் உயிரோடு இருந்திருந்தால்....ஆயினும் விதியை வெல்ல யாரால் முடியும்?

[சிறிது நெருங்கி வந்து, தாழ்ந்த குரலில்] அப்பாஜி......மேலே என்ன செய்வதாக உத்தேசம்?......

**திம்மாஜி:** பிரபோ! என்ன அப்படிக் கேட்கிறீர்களே..............எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நானும் இரண்டு தலைமுறைகளுக்கு மந்திரியாக இருந்தாகிவிட்டது.........எனக்கும் உடல் தளர ஆரம்பித்துவிட்டது. ஏதோ கிருஷ்ணா ராமாவென்று போகிற வழியைத் தேடலாமே என்றுதான் நினைக்கிறேன்.

**அச்சுத:** அப்பாஜி, இந்தச் சமயத்திலா?......அதுவும் நீங்களா? நான் அதைக் கேட்கவில்லை......சக்கரவர்த்தியாக.........

**திம்மாஜி:** ஏன்? ராஜகுமாரர் விட்டலர்?

**அச்சுத:** விட்டலன்தான் குழந்தையாயிற்றே?

**திம்மாஜி:** *[திடுக்கிட்டவராய்] அதனால்?*

**அச்சுத:** *பச்சைக் குழந்தையைச் சக்கரவர்த்தியாக முடி சூட்டினாலும், அவனால் அரசாள முடியாதே!*

**திம்மாஜி:** *அப்படியானால்?*

**அச்சுத:** *[தயக்கத்துடன்] அடுத்த வாரிசு முறை கொண்டவர் . . .*

**திம்மாஜி:** *அவர் யார்?*

**அச்சுத:** *அப்பாஜி, நான் இன்னும் சிறு பிள்ளையல்ல. யுக்த வயசை அடைந்தவன் தான்.*

**திம்மாஜி:** *[முகத்தைச் சுளித்துக்கொண்டு] பிரபோ! மன்னிக்கவேண்டும். எல்லாம் தங்களுக்குத் தெரிந்திருக்கும்போது என்னை ஏன் கேட்கவேண்டும்?*

**அச்சுத:** *அப்பாஜி, நான் தங்களைக் காரணத்தோடுதான் கேட்கிறேன். தாங்கள் எப்போதும் கிருஷ்ணதேவனிடம் அதிகப் பிரீதியை வைத்திருக்கிறீர்கள். அத்தகைய அபிமானத்தைச் சக்கரவர்த்திக்கு அடுத்த வாரிசுமுறை கொண்ட ராஜகுமாரனை என்னிடம் ஏனோ காண்பிக்கவில்லை? அதனால்.....ஆனால், கிருஷ்ணன் எப்படித் துளுவ வம்சத்தவன் ஆவன்? என் தந்தையின் மகனாயினும் வேலைக்காரிக்குப் பிறந்தவன்தானே! தாய்வழியில் அவனுக்கு உயர்குலப் பெருமை உண்டா?*

**திம்மாஜி:** [கடுங் கோபம் கொண்டு, கண்களில் தீப்பொறி பறக்க] ராஜகுமாரரே, தங்கள் பிறப்பையும் பதவியையும் உத்தேசித்து நான் ஒன்றும் கூற முடியாதவனாக இருக்கிறேன். தங்கள் தந்தையார் கைப்பிடித்து மணம் செய்து கொண்ட தேவியைத் தாங்கள் இவ்விதம் இழிவு படுத்துவது ஏற்றதன்று. மற்றொரு முறை இப்படிச் சொல்லாதீர்கள்.

**அச்சுத:** ஏன், உண்மையைச் சொன்னால்...

**திம்மாஜி:** நாகலாதேவியின் பெருமையைத் தாங்கள் அறியமாட்டீர்கள்.

**அச்சுத:** அப்படியானால் தாங்கள் கிருஷ்ணனுக்கே முடி சூட்டப்போகின்றீர்களல்லவா?

**திம்மாஜி:** [கோபம் வருத்தமாக மாறி] இதற்குத்தான் முதலிலேயே சொன்னேன்: இந்தக் கஷ்டங்கள் யாவும் வயசு முதிர்ந்த எனக்கு எதற்காக என்று?......யார் சக்கரவர்த்தியாக முடி சூட்டப்பெறுவர் என்பதைப்பற்றி நான் என்ன சொல்ல முடியும்? அது குடிமக்களின் விருப்பத்தையும் மஹாஸாமந்தர்கள், தண்ட நாயகர்கள் முதலியோருடைய அங்கீகாரத்தையும் பொறுத்தது. ஒருகால் தங்களுக்கே அந்தப் பதவி கிடைத்தாலும்....

**அச்சுத:** அப்பாஜி, அது ஒருகாலுமில்லை... மகாஸாமந்தர்களையும், தண்டநாயகர்களையும் ஆட்டிவைக்கும் சூத்திரக் கயிறு தங்கள் கையில்

இருக்கிறது. குடிமக்களோ வாயில்லாப் பிராணிகள். எல்லாம் தங்கள் விருப்பப்படியே. . .

**திம்மாஜி**: அப்படித் தெரிந்திருந்தால் என்னை எதற்காகக் கேட்கிறீர்கள்?

**அச்சுத**: ராஜவம்சத்தவர் எல்லோருக்கும் ஏற்படும் அவமானம்.

**திம்மாஜி**: என்ன நேர்ந்துவிட்டது இப்பொழுது?

**அச்சுத**: [படபடப்புடன்] அப்பாஜி, எல்லாவற்றையும் நான் அறிவேன்! ராஜதந்திரத்தில் நிபுணரான தாங்கள் கிளிப்பிள்ளைக்குப் பழக்குவதுபோல வெகு காலமாகவே தயார் செய்திருக்கிறீர்கள். சக்கரவர்த்தி வீரநரஸிம்ஹர் இவற்றை அறியாமல் தங்களை நம்பி மோசம் போனார். அவருடைய கடைசி ஆணையை மீறிக் கிருஷ்ண தேவனுடைய கண்கள் என்று ஆட்டின் விழிகளைக் கொண்டுபோய் அவரிடம் காண்பித்து ஏமாற்றியது எனக்குத் தெரியாதென்று நினைத்து விட்டீர்கள்? இந்த நாடகம் எத்தனை நாள் நடைபெறும், பார்க்கலாம்.

[கோபத்துடன் வெளியில் போகிறார்.]

**திம்மாஜி**: ராஜவம்சத்தில் பிறந்துவிட்டால், குணப்பெருமை உண்டா? உம். . . .கடவுள் கிருபை...

# VI

**ராஜவீதியில் மந்திரி சாளுவ திம்மாஜியின் மாளிகை: இரவு.**

*[படுக்கையறையில் தூங்கும் விளக்கு ஒன்று மங்கலான வெளிச்சத்தைக் கொடுத்துவருகின்றது. ஒருபுறத்தே மஞ்சத்தில் படுக்கை விரிக்கப்பட்டிருக் கிறது. நேரமாகியும் திம்மாஜி படுக்கச் செல்லாமல் உலவிக்கொண்டிருக்கிறார்.]*

*[காவலன் நுழைகிறான்.]*

**காவலன்:** *பிரபோ, விரூபாக்ஷ தண்ட நாயகர் வந்திருக்கிறார்.*

**திம்மாஜி:** *சரி, வரச் சொல்.*

**காவலன்:** *புத்தி, புத்தி.*

*[காவலன் போகிறான். தண்டநாயகர் வருகிறார்.]*

**விரூ:** *பிரபோ, நமஸ்காரம்.*

**திம்மாஜி:** *என்ன, தண்டநாயகரே! உங்களுக்கு ஒரு நல்ல செய்தி. இந்த ஸாம்ராஜ்யத்தின் ஒற்றர்படைக்கு இனி நீங்களே தலைவர். இது சக்கரவர்த்தியின் உத்தரவு.*

**விரூ:** *மஹாராயர் சித்தம். தங்கள் கிருபை எனக்குப் பரிபூர்ணமாக இருக்கும் வரையில்*

என்னைப்பற்றிச் சிறிதும் நான் கவலைப்பட வேண்டியதில்லையே!

**திம்மாஜி:** [புன்சிரிப்புடன்] ஆமாம், ஆமாம். உங்களுடைய தயவையன்றோ நாங்கள் எதிர் பார்த்திருக்கிறோம்! . . . . . சரி, விரூபாக்ஷரே, குடிமக்கள் என்ன சொல்லிக்கொள்கிறார்கள்? அவர்கள் விருப்பம் எப்படி இருக்கிறது?

**விரூ:** பிரபோ, எனக்கு ஒன்று மட்டில் இன்னும் பிடிபடவில்லை. அரண்மனையில் நிகழும் ரகசியச் செய்திகள்கூட நாட்டில் நன்றாகப் பரவி வருகின்றனவே! அவை எவ்விதம் வெளியே போகின்றன என்பதே தெரியவில்லை.

**திம்மாஜி:** அது என்ன அப்படிச் சொல்லு கிறீர்களே! அரண்மனை விஷயம் எப்போதும் பகிரங்க ரகசியமாயிற்றே. அதை நாம் மறைத்து வைக்கவும் முடியாது. அது கிடக்கட்டும். ஸாம்ராஜ்யத்தின் எதிர்காலத்தைப்பற்றி ஜனங் கள் என்ன எண்ணுகிறார்கள்?

**விரூ:** [தழுதழுத்த குரலில்] பிரபோ, சக்கர வர்த்தியையும், அவரைச் சேர்ந்தவர்களையும் பற்றி நாட்டிலே விரோதமான பிரசாரம் ஒன்று நடந்து வருகிறது.

**திம்மாஜி:** என்ன?

**விரூ:** ஆம், அவர்கள் முக்கியமாகத் தங்களைக் குறித்தே பேசுகிறார்கள். நான் கேள்விப் பட்டதைத் தெரிவிப்பதற்கு மன்னிக்கவேண்டும்.

**திம்மாஜி:** உங்களுடைய கடமையைச் செய்வதில் குற்றம் என்ன இருக்கிறது? அன்றி, இவ்விதமான விஷமப் பிரசாரம் நடக்கக் கூடும் என்பதையும் நான் ஓர் அளவு எதிர்பார்த்தே இருக்கிறேன்.

**விரூ:** இத்தகைய பிரசாரத்துக்கு ஆதி கர்த்தர் பெரிய இடத்தைச் சேர்ந்த ஒருவர் என்றே தோன்றுகிறது.

**திம்மாஜி:** அதுவும் தெரியும். ஜனங்கள் சொல்லிக்கொள்வதைக் கூறுங்கள்.

**விரூ:** பிரபோ, வேளாண்மக்கள் இதைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளவில்லை. பருவ மழை பெய்து, பூமியும் விளைந்து, அநீத வரி கொடுக்கவேண்டி நேரிடாத வரையில் அவர்கள், 'ராமன் ஆண்டால் என்ன? ராவணன் ஆண்டால் என்ன?' என்ற கொள்கையுடனேயே இருக் கிறார்கள். நம் பழைய ஹிந்து தர்மத்தைப் பாதுகாப்பதற்காக இந்த ஸாம்ராஜ்யம் நிலைத் திருப்பதைப்பற்றி ஒரு சாரார் மனமாரச் சந்தோஷம் அடைந்துள்ளார்கள். இவர்கள் சக்கரவர்த்தியின் மகுடாபிஷேகம் நடக்கப் போகும் நன்னாளை எதிர்பார்த்திருக்கின்றனர்.

**திம்மாஜி:** அது இருக்கட்டும். விஷமப் பிரசாரத்தைப்பற்றி முதலில் சொல்லுங்கள்.

**விரூ:** அது இப்போதுதான் ஆரம்பித்திருக் கிறது. இன்னும் நன்றாகப் பரவவில்லை. நாட்டி

னுள் அங்கங்கே ஓரிரண்டு பேர்கள் மட்டும் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள்.

**திம்மாஜி:** அதனால் நாம் சும்மா இருந்து விடக் கூடாது. அது விஷம் ஏறுவதுபோல வெகு சீக்கிரம் கௌவிக்கொண்டுவிடும். தெரியாமலா 'விஷமப்பிரசாரம்' என்று அதற்குப் பெயரிட்டார்கள். அதை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும்.

**விரு:** பிரபோ, அவர்கள் நாக்கில் நரம்பில்லாமல் பிரசாரம் செய்வதை எடுத்துக் கூறுவதற்கே எனக்கு வாய் வரவில்லை. தாங்கள் செய்யும் காரியங்கள் யாவும் ஸாம்ராஜ்யத்தின் நன்மையை உத்தேசித்தே என்று தாங்கள் கூறினாலும் அவை தங்கள் சுயநலத்திற்காகவேயாம். நாட்டின் சர்வாதிகாரியாக விளங்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே தாங்கள் அவற்றைச் செய்துவருகிறீர்களாம்.

**திம்மாஜி:** [கண்கள் கலங்கக் கோபத்துடன்] என்ன? எப்படி?

**விரு:** புஜபல மஹாராயரை வஞ்சித்துத் தாங்கள் கிருஷ்ணதேவராயருக்குச் சக்கரவர்த்திப் பதவியை அளித்திருக்கிறீர்களாம். சக்கரவர்த்தியின் பிறப்பைப்பற்றியும் அவர்கள் திரித்துக் கூறுவதுடன் அந்தப் பிறவிக் குணத்தாலேயே அவர் இப்போதும் பெண்பித்துப் பிடித்து ஒரு தாஸியைச் சுற்றிக்கொண்டிருக்கிறார் என்றும்

சொல்லுகிறார்கள். அவரை ஒரு பொம்மையாக வைத்துக்கொண்டு அரசாங்கத்தைத் தாங்களே நடத்தலாம் என்ற எண்ணத்துடன் தாங்களும் அதற்கு உடந்தையாக இருந்துவருகிறீர்களாம்.

**திம்மாஜி:** உம்......

**வீரு:** அம்மட்டிலோ? நாளைக்கு அவள் எவ்விதமாயினும் சக்கரவர்த்தினியாக வந்து விடக்கூடாது என்று அவர்களில் சிலர் கலங்கி நிற்கின்றனர்.

**திம்மாஜி:** [பதற்றத்துடன்] என்ன? சின்ன தேவியின் பெருமையையும் அருங்குணத்தையும் அவர்கள் அறிவார்களோ? இந்த ஸாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினிப் பதவிக்கு அவளே ஏற்றவள். அந்தப் பதவி தனக்கு வேண்டாம் என்று அவளே உதறித் தள்ளினாலும் அது அவளை விடாது. நாளைக்கு மகுடாபிஷேக காலத்தில்...

**வீரு:** அவர்களும் அத்தகைய சந்தர்ப்பத்தையே எதிர்பார்த்திருக்கிறார்கள். மகுடாபிஷேக காலத்தில் அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்து அநேகமாகக் கலகம் விளைவித்து அரசுரிமையைக் கைப்பற்றத் தீர்மானித்திருக்கிறார்கள் என்று கேள்வி. பிரமுகர்கள் முடிசூட்டுவிழாவின் கேளிக்கைகளில் மூழ்கி ஆனந்தம் அநுபவிக்கும் காலமே அதற்கு ஏற்றது என்று அவர்கள் எண்ணுகிறார்கள்.

**திம்மாஜி:** யார் யார்?

**விரு:** பழைய சாளுவ வம்சத்தைச் சேர்ந்த சிலரும், அச்சுத......

**திம்மாஜி:** விருபாக்ஷரே, ஏன் தயங்குகிறீர்கள்? எனக்கு அந்த விஷயங்கள் முழுமையும் தெரியும். அச்சுததேவராயர் பெயரைச் சொல்வதற்கு நீர் தயங்கவேண்டியதில்லை. சாளுவ வம்சத்துக்குத் திருமலாம்பா தேவியும் துளுவ வம்சத்துக்கு அச்சுததேவராயரும் சரியான வாரிசு முறை கொண்டவர்கள் என்று அவர் நினைக்கிறார். தவிர, திருமலாம்பா தேவியைத் தாம் மணந்துகொண்டு அரசுரிமையை அடைந்து விட்டால் பிறகு தம்மை ஒருவரும் அசைக்க முடியாது என்று அச்சுததேவராயர் மனக் கோட்டை கட்டியிருக்கிறார். இந்த விஷயம் எனக்கு முன்னரே தெரியும். ஆனால் இது ஒரு போதும் நடக்கப்போவதில்லை. திருமலாம்பா தேவி அச்சுதரை எவ்வளவு தூரம் வெறுத்து வருகிறாள் என்பதை அவர் அறியவில்லை.

**விரு:** திருமலாம்பா தேவியாருக்குச் சக்கரவர்த்திமீது எந்த விதமான விரோதமும் இல்லை என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அன்றி, தேவியார் தங்களிடம் இன்றைக்கும் உயர்ந்த மதிப்பு வைத்திருக்கிறார்.

**திம்மாஜி:** அது இருக்கட்டும். முதலில் இந்த விஷமப் பிரசாரத்தைக் கவனிக்கவேண்டும்.

இவ்விதம் சக்கரவர்த்தியைக் குறை கூறித் திரிவ தால் பயன் ஒன்றும் ஏற்படப்போவதில்லை. உள்ளூற அடங்கிக் கிடக்கும் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பி உருவாக்கி வெளிப்படுத்தவே பிரசாரம் உபயோகப்படும். ஆனால் இல்லாத வற்றைச் சிருஷ்டித்துத் துவேஷம் உண்டாக்கு வதற்கு அது ஏற்றதன்று. காலம் காட்டிக் கொடுத்துவிடும். எனினும் அத்தகைய மனக் கசப்புக்கும் இடங்கொடுக்கக் கூடாது. ஆகவே அதை முதலில் குலைத்து அழித்துவிடவேண்டும். தேவையானால் எதிர்ப் பிரசாரமும் செய்யத் தயங்கவேண்டாம். இந்த விஷயத்தை முதலில் கவனியுங்கள்.

## VII

**ராஜவீதியில் சின்னாதேவியின் மாளிகை: மாலை.**

*[உப்பரிகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிங்கார அறையின் நடுவில் சின்னாதேவி உட்கார்ந்து கிருஷ்ண தேவராயரின் வரவை எதிர்பார்த்து வீணையை மீட்டிப் பாடிக்கொண்டிருக்கிறாள்.]*

"வானின் றிழிந்து வரம்பிகந்து
மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போல்
உள்ளும் புறத்தும் உளனென்ப
கூனும் சிறிய கோத்தாயும்
கொடுமை யிழைப்பக் கோல்துறந்து
கானுங் கடலுங் கடந்திமையோர்
இடுக்கண் காத்த கழல்வேந்தை."

*[அவள் பாடிக்கொண்டிருக்கும்போது மந்திரி திம்மாஜி மெதுவாக வந்து அவள் அறியாமல் உட்கார்ந்து பாட்டைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். பாட்டு முடிந்தவுடன் சின்னாதேவி வீணை வாசிப்பை நிறுத்திவிட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிறாள்.]*

**சின்னா:** வரவேண்டும், வரவேண்டும்...... ஸ்வாமி, ஏதோ மிகுந்த யோசனையுடன் இருப்ப

தாகத் தோன்றுகிறதே.....என்ன அப்படி? இங்கே கூடவா?

**திம்மாஜி:** ஒன்றுமில்லை. ஸங்கீதத்துக்கு உள்ள மகிமையையே அறிந்து பார்க்கிறேன். அதற்கு எவ்வளவு சக்தி இருக்கிறது? யாவரையும் வசியப்படுத்தி, எத்தகைய கவலையையும் ஒழித்து, மனிதனைச் சாந்தஸ்வரூபி யாக்குகிறது. இசைக்கு இணையாக எதைத்தான் கூற முடியும்?

**சின்னு:** என்னுடைய பாட்டையே இப்படிப் புகழ்ந்தால், கலையில் கடைத்தேறியவர்களை எப்படிப் புகழமாட்டீர்கள்?

**திம்மாஜி:** சின்னுதேவி, இந்தக் கலையில் நீ பெற்றுள்ள பாண்டித்தியம் உனக்கே தெரியாது. வீணுதேவியின் அவதாரம் என்றே உன்னைச் சொல்ல வேண்டும். நானும் எத்தனையோ பேர்கள் பாடக் கேட்டிருக்கிறேன். ஆயினும் இன்றை அநுபவம் எனக்கு இதற்கு முன் ஏற்பட்டதில்லை. உன் சங்கீதத்தைக் கேட்டதும் சிதறுண்டு கிடந்த என் எண்ணங்கள் யாவும் திரண்டு ஒன்று சேர்ந்தன. மனக் கவலையும் நீங்கியது.

**சின்னு:** ஏழையைப் பரிகசிக்கிறீர்களா? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே?

**திம்மாஜி:** தேவி, ராஜாங்கத்தின் ரகஸ்யங்கள் எத்தனையோ இருக்கும். ராஜ்யத்தின் நலத்தையும் சக்கரவர்த்தியின் க்ஷேமத்தையுமே

மனத்தில் கொண்ட எனக்குப் பலவிதமான கவலைகள் ஏற்படுவது இயற்கையே.

**சின்ன:** அது எனக்குத் தெரியாதா? கிருஷ்ண தேவர் சக்கரவர்த்தியாக இப்போது வகித்து வரும் பதவிக்குத் தாங்கள் அன்றோ காரண பூதர்? தங்களுடைய உதவி அவருக்குக் கிட்டா திருந்தால், இன்று என் நாதர் எந்த நிலையில் இருப்பார்?......

**திம்மாஜி:** குழந்தாய், அதை இப்போது சொல்லிக் காட்டுவானேன்?.........நீ அதை ஞாபகப்படுத்தியதும் ஒரு விதத்தில் நல்லது தான். நான் என்ன செய்தும் சக்கரவர்த்தியைச் சூழ்ந்திருக்கும் கஷ்டங்கள் எல்லாம் இன்னும் நீங்கவில்லையே!

**சின்ன:** [திடுக்கிட்டவளாக] என்ன? இன்னுமா அவர் கஷ்டம் நீங்கவில்லை?

**திம்மாஜி:** ஆம்.

**சின்ன:** அது எப்படி? தாங்கள் இருக்கும் போது கூடவா?

**திம்மாஜி:** அவர் அடைந்துள்ள அரசுரிமைக் குப் போட்டியாகப் பலர் காத்திருப்பதுகூடப் பெரிதல்ல; நாட்டு மக்களுக்கு அவரிடம் முன்பு இருந்த பிரீதி குறைந்து வருவதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது. வெளி விரோதிகளை நாம் எளிதில் அடக்கிவிடலாம். ஆனல் குடி-

மக்களின் அதிருப்தியை ஒடுக்குவது அவ்வளவு எளிதானதன்று.

**சின்ன:** அதிருப்திக்குக் காரணம் என்ன? அவர் ஏதேனும் தவறு இழைத்தாரோ?

**திம்மாஜி:** சின்ன,......உன் குழந்தையுள்ளத்தை நான் என்னென்று கூறுவேன்?

**சின்ன:** என்ன?

**திம்மாஜி:** குழந்தாய், நான் உன்னை என் பெண்ணுகவே பாவித்து வருகிறேன். உன்னிடம் நான் எவ்வளவு வாஞ்சை வைத்திருக்கிறேன் என்பதையும் நீ அறிவாய். அதனுல் இப்போது நான் உன்னிடம் சொல்லப்போவதை நினைத்து நீ வருத்தப்படக் கூடாது. சக்கரவர்த்திக்கு உன்னிடம் உள்ள அன்பும் உறவுமே குடிமக்கள் அவ்விதம் நினைப்பதற்குக் காரணங்களாகும்.

**சின்ன:** [திகைப்புற்று] உண்மையாகவா?

**திம்மாஜி:** ஆம், உண்மைதான். ஸாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினியாக நாளையே நீ வந்துவிடுவாய் என்று அவர்கள் அஞ்சுகிருர்கள்.

**சின்ன:** எனக்கு அந்த ஆசை இருந்தால் தானே?

**திம்மாஜி:** சின்ன, உனக்கு அந்த ஆசை இல்லாவிட்டாலும், ராஜபத்தினி அந்தப் பதவியை வகித்துத்தானே ஆகவேண்டும்?

**சின்ன:** [ஒன்றும் தோன்ருதவளாய்] அப்படியானல்?

திம்மாஜி: ஜனங்களும் எல்லாச் சமூகத் தாரும் விரும்பிப் போற்றக்கூடிய ஒருத்தியே சக்கரவர்த்தினியாக இருக்கத் தகுதி உடையவள்.

சின்னு: அப்பாஜி, பொது ஜனங்கள் வேண்டு வதுதான் என்ன? ஒளிமறைவாகப் பேசுவா னேன்? வெளிப்படையாகச் சொல்லிவிடுங்கள்.

திம்மாஜி: அதனை நான் எப்படிக் கூற முடியும்?

சின்னு: ஏன், தாங்கள் இவ்வளவு கூறியதே போதும். தாஸிக்குலத்தில் பிறந்த என்னை அவர்கள் விரும்பவில்லைபோலும்! ராஜவம்சத்தில் பிறந்து பரம்பரைப் பெருமை உள்ள ஒருத்தி யைத்தானே அவர்கள் சக்கரவர்த்தினியாக்க விரும்புகிறார்கள்? அப்படியே ஏற்பாடு செய்து விட்டால்?

திம்மாஜி: அது எப்படி முடியும்? சக்கர வர்த்தியின் சுபாவத்தைத்தான் நீ நன்றாக அறி வாயே?

சின்னு: [சிறிது நேரம் யோசித்துவிட்டு] பிரபோ, நான் ஒன்று கேட்கிறேன். இதைச் சக்கரவர்த்தி அறிவாரா?

திம்மாஜி: அவருக்குத் தெரியாது. உன் னிடந்தான் இதைப்பற்றி முதல்முதலாகப் பேசு கிறேன்.

[கொஞ்ச நாழிகை இருவரும் பேசாமல் இருக்கின்றனர்.]

**சின்னு:** ஸ்வாமி, நான் ஒருத்தி இல்லாமல் இருந்தால் இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்காதே! சக்கரவர்த்திக்கும் குடி மக்களுக்கும் நடுவில் நான்தானு நிற்கவேண்டும்?

**திம்மாஜி:** [சிறிது படபடப்புடன்] குழந்தாய், இல்லவே இல்லை. நீ இல்லாவிட்டால் மஹாராஜா இப்போது அந்தப் பதவியை அடைந்திருக்கமாட்டார். அவர் சிறைப்பட்டிருந்த காலத்தில் வீரநரஸிம்ஹர் உத்தரவுக்கும் அஞ்சாமல் நீ அவருக்கு ஆச்ரயம் அளித்துத் தேறுதல் கூறியிராவிட்டால் அவர் இந்தச் சமயத்தில் எப்படி இருப்பாரோ? பகவான்தான் சொல்ல முடியும்.

**சின்னு:** பிரபோ, எனக்குப் பதவியில் சிறிதும் மோகமில்லை. நான் வேண்டுவது அவருடைய அன்பு ஒன்றைத்தான். அது எனக்குக் கிடைத்திருக்கும்பொழுதே ஸாம்ராஜ்யத்தின் எதிர்காலச் செழிப்பையும் மக்களின் சந்தோஷத்தையும் சக்கரவர்த்தியின் க்ஷேமத்தையும் கோரி, நான் விலகிவிட்டால்......

**திம்மாஜி:** [இடைமறித்து] குழந்தாய், அது எப்படி முடியும்? சக்கரவர்த்தி ஒருநாளும் இதற்குச் சம்மதிக்கமாட்டார்.

**சின்னு:** ஸ்வாமி, உலகத்திலே மனிதராகப் பிறந்தவர்களுக்குச் சுகம் துக்கம் ஆகிய இரண்டும் மாறிமாறித்தான் வரும். சுகத்தைக்காட்டி

லும் மனச் சாந்தியே என்றும் அழியா இன்பத்தைப் பயக்கும். சக்கரவர்த்தியின் அன்பு என் மனத்தை விட்டு என்றைக்கும் அகலாத சாந்தியை அளித்திருக்கிறது. இது ஒன்றே எனக்குப் போதும். என்னுடன் கொண்டுள்ள உறவின் காரணமாக அவர் பெயர் என்றைக்கும் கறை படக்கூடாது. அவர் என்னை மறந்துவிடட்டும்.

**திம்மாஜி**: சின்ன, என்ன, அது நடக்கக் கூடியதா? உன்னையோ சக்கரவர்த்தியையோ நான் இன்று நேற்றுத்தான் அறிவேனு? எல்லா விதங்களிலும் உன்னைக்காட்டிலும் மேம்பட்ட தேவி ஒருத்தி சக்கரவர்த்திக்கு மகிஷியாகக் கிடைப்பாளா?

**சின்ன**: ஸ்வாமி, தாங்கள் இப்படிச் சொல்லலாகாது......

**திம்மாஜி**: உங்கள் இருவருக்கும் இடையேயுள்ள பிணைப்பின் உறுதியையும், அதன் தெய்விகத்தன்மையையும் நான் நன்ருக அறிவேன். உன்னைத் துறந்து சக்கரவர்த்தியால் ஒரு நிமிஷமும் உயிர் வாழ முடியாது. இதை நிச்சயமாகக் கொள்.

**சின்ன**: மஹாமந்திரி, சாம்ராஜ்யத்தின் நன்மையைக்காட்டிலும் ஒரு பெண்ணின் உரிமை எவ்விதத்திலும் மேம்பட்டதாகாது.

**திம்மாஜி**: குழந்தாய், உண்மைதான். ஆயினும் அது ஸாம்ராஜ்யத்துக்கு ஜீவநாடியாக

விளங்கவேண்டிய சக்கரவர்த்தியையே பாதிக்கு மாயின் என்ன செய்வது? சுவரை வைத்துக் கொண்டல்லவோ சித்திரம் எழுதவேண்டும்?

**சின்ணு:** அப்பாஜி, ஸாம்ராஜ்யத்திற்காகவே வேறு பற்றுக்களையெல்லாம் துறந்து உயிர் வாழும் தாங்கள் இவ்விதம் சொல்லக்கூடாது. குடிமக்களின் மனத்தை அற்ப விஷயத்திற்கே யாயினும் வருத்தலாகாது......ஆம். குடிமக்க ளால் அன்றோ ஸாம்ராஜ்யம் நிலைநிற்கின்றது? அவர்களை விரோதித்துக்கொண்டால் ஸாம்ராஜ் யத்தின் கதி?

**திம்மாஜி:** சின்ணு?

**சின்ணு:** ஸ்வாமி, தாங்கள் எப்படியாவது சக்கரவர்த்தியை இதற்கு இணங்கச் செய்ய வேண்டும்.

# VIII

**அரண்மனையில் சக்கரவர்த்தியின் பள்ளியறை. விடியற்காலம்.**

[*அறையின் மத்தியில் ஓர் அகன்ற சாளரத்தை எதிர்நோக்கி நிற்கும் மஞ்சத்தில் சக்கரவர்த்தி கிருஷ்ண தேவராயர் படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கிறார்.*

*வெளியே வைணிகர்கள் பள்ளியெழுச்சி பாடுகிறார்கள்.*]

"புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி
கலந்தது குணதிசைக் கனைகட லரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல்கொண் டடியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தனர் ஆதலின் அம்மா
இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே."

[*பாட்டின் நாதம் கேட்டுச் சக்கரவர்த்தி கண் விழித்துக் கண்ணுடியில் முகம் பார்த்துப் படுக்கையினின்றும் இறங்கி அறையில் உலாவிக்கொண்டிருக்கிறார். காவலன் வருகிறான்.*]

**காவலன்:** மஹாராஜா, ஸமுகத்தின் சேவைக்கு மஹாமந்திரி சாளுவ திம்மாஜி வந்து காத்திருக்கிறார்.

**கிருஷ்ண:** வரச் சொல்.

**காவலன்:** புத்தி, புத்தி.

[காவலன் போகிறான். மந்திரி திம்மாஜி வருகிறார்.]

**திம்மாஜி:** ஜய விஜயீபவ!

**கிருஷ்ண:** அப்பாஜி, வரவேண்டும். ஏது, தாங்கள் இவ்வளவு அதிகாலையிலேயே புறப்பட்டு வந்துவிட்டீர்கள்?

**திம்மாஜி:** மஹாப் பிரபு, தங்களைத் தனிமையில் கண்டு பேசுவதற்குத் தக்க சமயம் இதைக் காட்டிலும் வேறு கிடைக்குமா? ஆகவே......

**கிருஷ்ண:** என்ன? இந்த ஸாம்ராஜ்யத்தின் க்ஷேமத்தையே முக்கியமானதாகக் கொண்டுள்ள மஹாமந்திரியும் மஹா தண்டநாயகருமான தாங்கள் கூடவா என்னிடம் பேசுவதற்குச் சந்தர்ப்பம் பார்க்கவேண்டும்!

**திம்மாஜி:** மஹாப்பிரபு, அப்படியன்று. இது ஸமுகத்தைப் பொறுத்த விஷயம்.

**கிருஷ்ண:** என்னைப் பொறுத்த விஷயமேயாயினும் தங்களுக்கு இல்லாத உரிமையா?...... என்ன விஷயம்?

**திம்மாஜி:** சக்கரவர்த்தி அரசுரிமையை ஏற்று நான்கு மாதங்கள் ஆகிவிட்டன. சாமந்தர்கள்,

தண்ட நாயகர்கள், சிற்றரசர்கள் முதலியோர் புடைசூழப் பட்டாபிஷேக வைபவத்தைச் சிறப்பாக நடத்திவைக்கவேண்டுமென்று நாட்டு மக்களும் பிரமுகர்களும் விரும்புகிறார்கள்.

**கிருஷ்ண:** இந்த ஆடம்பரங்கள் யாவும் வெளி வேஷமே. ஆயினும் அரசாங்கத்தில் சம்பந்தப்பட்ட பிறகு அவற்றை நாம் அனுஷ்டிக்கவேண்டியது அவசியம். ஆகவே, ராஜ புரோகிதரையும் ஸம்ஸ்தான ஜோதிஷரையும் கலந்துகொண்டு தாங்கள் அந்த வைபவத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள். மூன்று தலைமுறையாக மஹாமந்திரிப் பதவி வகித்து வரும் தங்களுக்குச் சம்பிரதாயங்களைப்பற்றி நான் கூறவேண்டியது ஒன்றுமில்லை.

**திம்மாஜி:** மகுடாபிஷேகத்துக்கு முன்னர் நடக்கவேண்டிய சுபகாரியம் மற்றொன்று உண்டு. ஸிம்ஹாஸனத்திலே தங்களுடன் வீற்றிருக்கும் தகுதி வாய்ந்த தேவி ஒருத்தியை.........

**கிருஷ்ண:** என்ன அப்பாஜி, எல்லாம் தெரிந்த தாங்கள் இவ்விதம் கூறுகிறீர்கள்?

**திம்மாஜி:** சக்கரவர்த்தி அவர்கள் அப்படிச் சொல்லக்கூடாது. 'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்ட'தாகக் கருதுவது நமது தர்மம்; பழக்கம். அதற்கு ஏற்ப நடந்து கொள்ளவேண்டியது நம் கடமை.

**கிருஷ்ண:** அதனால்?

**திம்மாஜி:** ஸாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினியாக இருப்பதற்குத் தகுந்த ஓர் உயர் குடும்பத்துப் பெண்ணைத் தாங்கள் மணம் செய்து கொள்ளவேண்டும்.

**கிருஷ்ண:** என்ன அப்பாஜி, பீடிகை பலமாக இருக்கிறதே......ஏன், சின்னதேவி இருக்கிறளே?

**திம்மாஜி:** நான் கூறுவது சக்கரவர்த்தியின் மனத்துக்கு வருத்தத்தைக் கொடுக்குமாயின் மன்னிக்க வேண்டுகிறேன். நாட்டு மக்கள் மஹாராஜாவின்மீது பரம விசுவாசமுள்ளவர்களாக இருக்கிறர்கள். அவர்களுக்கு வருத்தம் உண்டாகக்கூடிய காரியம் ஒன்றையும் நாம் செய்யக்கூடாது.

**கிருஷ்ண:** நாம் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளும் விஷயத்தில் நாட்டு மக்களுக்கு மனத் தாங்கல் ஏற்படக் காரணம் என்ன இருக்கிறது?

**திம்மாஜி:** திருவுள்ளத்துக்குத் தெரியாததன்று. சக்கரவர்த்தி ராஜமகிஷியுடன் சேர்ந்தே ராஜ்ய நிர்வாகம் செய்கிறர் என்பது நமது ராஜ தர்மம். அதனல் சக்கரவர்த்தினிக்கும் ராஜாங்கத்தில் ஒரு பதவி, ஒரு முக்கிய ஸ்தானம் உண்டு. ஆகவே ஸாம்ராஜ்யத்துக்குச் சக்கரவர்த்தினியாக வரப்போகிற தேவி குடிமக்களுடைய மதிப்பைப் பெற்றவளாக இருத்தல் அவசியம்.

அவர்கள் அன்புடன் விரும்பாத, ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு பெண்மணியை அந்தப் பதவியில் அமர்த்துவது அனர்த்தமாக முடியும்.

**கிருஷ்ண:** மக்கள் வெறுப்புக் கொள்ளும் படியாகச் சின்ன தேவியிடம் என்ன தோஷம் இருக்கிறது?

**திம்மாஜி:** இம்மாதிரி விஷயங்களில் ஜனங்கள் அங்கீகரிக்கக்கூடிய உயர்குலப்பிறப்பை முக்கியமானதாகக் கருதவேண்டும். ராஜாங்க நிர்வாகத்தில் அந்தப்புரத்துக்குள்ள செல்வாக்கை நான் சமுகத்துக்கு எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. குலப்பெருமை பெற்ற ஓர் அரச குமாரியே அதனைச் சரிவரச் சமாளித்து நிர்வகிக்க முடியும்......ஆனால் சின்ன தேவி பிறந்துள்ள குலமோ அதற்கு நேர்மாறாக இருக்கிறதென்பதை......

**கிருஷ்ண:** [சிறிது ஆத்திரத்துடன்] என்ன? அவளுடைய பெருமையைச் சாதாரண மக்களால் எளிதில் மதிப்பிட முடியுமா?

**திம்மாஜி:** அவள் தன் வரையில் எத்தகைய உயர் குணங்களைப் பெற்றிருந்தாலும் ஜனங்கள் அவளை எப்படி அங்கீகரிக்க முடியும்?......அவள் வீட்டுக்குத் தாங்கள் அடிக்கடி போய் வந்து கொண்டிருப்பதைப்பற்றி இப்பொழுதே ஜனங்கள் பலவிதமாகப் பேசி வருகின்றனர்.

**கிருஷ்ண:** [கோபத்துடன்] என்ன?

**திம்மாஜி:** நான் உண்மையைச் சொல்ல வேண்டியவனுகிறேன். அதற்காக மன்னிக்க வேண்டும். தங்கள் விரோதிகள், மஹாராஜா தாஸிலோலர் என்ற வதந்தியைக் கிளப்பிவிட்டிருக்கின்றனர். அதனுடன் நிற்கவில்லை. தங்கள் தாய்தந்தையரைப்பற்றியும் குறைகூறி அத்தகைய நடத்தையே தங்களிடமும் காணப்படும் என்று பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

**கிருஷ்ண:** [திடுக்கிட்டு] என்ன? எனக்கு விரோதிகளா?

**திம்மாஜி:** ஆம். சக்கரவர்த்திப் பதவியும் அதிகாரமும் நம்முடைய கையில் இப்போது இருக்கின்றன என்பது என்னவோ உண்மை தான். ஆயினும் அவை இன்னும் நம் கையில் நிலைகொள்ளவில்லை. நம்முடைய வலிமையை அவர்கள் அறியும்வரை......

**கிருஷ்ண:** [கண்கள் சிவக்க] இதற்குக் காரணமானவர்களை உடனே கண்டுபிடித்துத் தக்கபடி தண்டிக்கவேண்டியது அவசியம்.

**திம்மாஜி:** [நிதானமாக] இம்மாதிரி விஷயங்களில் அவசரப்படக்கூடாது. பொறுத்துப் பார்க்கவேண்டும். விரோதிகளின் நிலைமையை அறிந்தே நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**கிருஷ்ண:** அப்படியானால் அவர்கள் யார் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

**திம்மாஜி:** திண்ணமாகக் கூற முடியாது; ஆனால் ஒன்றுமட்டில் நிச்சயம். அரசுரிமையை அடையத் தங்களுக்குப் போட்டியாகப் பலர் காத்திருக்கிறார்கள். தங்கள் சகோதரர்களான அச்சுததேவராயர், ஸ்ரீரங்கதேவராயர், தெய்வ கதியடைந்த சக்கரவர்த்தி புஜபல மஹாராஜ ருடைய குமாரர் விட்டலதேவராயர், பழைய சாளுவ அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியவர்களை முக்கியமாகக் கூறலாம். அவர் அவர் உரிமையை ஸ்திரப்படுத்தப் பக்கபலமாக ஒவ்வொருவருக்கும் முக்கியஸ்தர்கள் சிலர் உள்ளனர். அவர்கள் தங்களுக்கு நேரடியாகக் கெடுதல் செய்ய முடியாமல்தான் பார்த்துக் கொள்ளலாமே தவிர, உள்ளூற விஷமம் செய்வ தினின்றும் எப்படித் தடுக்க முடியும்?

**கிருஷ்ண:** [சிறிது யோசனை செய்து] ஆம், வாஸ்தவந்தான்.....அதற்காக இப்போது என்ன செய்யவேண்டும்?

**திம்மாஜி:** மஹாப்பிரபு,......நான் சொல்லப் போகும் யோசனைக்காக என்னைப் பொறுத் தருளவேண்டும். அதைப் பின்பற்றினால், குடி மக்கள், பழைய ராஜவம்சத்தார் முதலியோரை ஒருங்கே திருப்தி செய்துவிடலாம்.....பழைய ராஜவம்சமான சாளுவ குலத்திற் பிறந்த

கன்னிகை திருமலாம்பாளைத் தங்கள் தேவி யாகக் கொண்டு அருளவேண்டும்.

**கிருஷ்ண:** [*சிறிதுநேரம் மௌனமாக இருந்துவிட்டு*] அப்பாஜி, இதற்கு நான் சம்மதியேன். சின்னு தேவியை ஒருபொழுதும் நான் கைவிட முடியாது; அவளுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறமாட்டேன். பொய்யன் என்ற பெயர் வாங்க முடியாது.

**திம்மாஜி:** நீங்கள் கொடுத்த வாக்கை மீற வேண்டாம். சின்னு தேவியே தங்களைப் பிரதிக்ஞையினின்றும் விடுவித்துவிட்டால்?

**கிருஷ்ண:** [*திகைப்புடன்*] எப்படி?

**திம்மாஜி:** ஆம். ராஜ்யத்தின் நலத்தைக் குறித்துத் தங்களை வேறு விவாகம் செய்து கொள்ள அனுமதித்துவிட்டால்?

**கிருஷ்ண:** [*ஆச்சரியத்துடன்*] உண்மையாகவா?

**திம்மாஜி:** வாஸ்தவம், மஹாப்பிரபு......

**கிருஷ்ண:** [*சிறிது நேரம் திகைப்புற்றுப் பிறகு*] அப்பாஜி, எல்லாம் குழம்பிக் கிடக்கின்றன. எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. மற்றொரு சமயம் பார்த்துக்கொள்ளலாம்......

**திம்மாஜி:** சித்தம்.

**கிருஷ்ண:** ஆஹா, என்ன பெருந்தன்மை! எவ்வளவு மகத்தான தியாகம் செய்ய அவள்

தயாராக இருக்கிறாள்! பேதை, ஒரு பெண். அவளுக்கு இருக்கும் திடசித்தங்கூடவா வீரன் என்று பெயர் வாங்கிய எனக்கு இல்லாமல் போய்விட்டது? [சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தவனாகி] அப்பாஜி, குழந்தைமுதல் என்னை எடுத்து வளர்த்தவர் தாங்கள். என் உயிரைக் காப்பாற்றியவரும் தாங்களே. நான் இப்போது அடைந்துள்ள பதவியும் தாங்கள் அளித்ததே. ஆதலின் நான் தங்களுக்குப் பலவிதங்களிலும் கட்டுப்பட்டவன். ஆயினும் ஒன்றுமட்டில் முடிவாகக் கூறிவிடுகிறேன்......நான் சின்னாவை ஒருகாலும் கைவிட முடியாது. இந்த அரசுரிமையை வேண்டுமானாலும் இழப்பதற்குச் சித்தமாயிருக்கிறேன். ஆனால் அவளை, அந்த ஒப்பில்லா மாணிக்கத்தை, இழக்க முடியாது.

# IX

**சின்னதேவியின் மாளிகை: மாலை.**

[*மாலை விளக்கேற்றும் நேரம். சின்னதேவி மிகுந்த வியாகுலம் அடைந்து ஏக்கத்துடன் உட்கார்ந்து பாடிக்கொண்டிருக்கிறாள்.*]

**"ஊரிலேன் காணி யில்லை உறவுமற் றொருவ ரில்லை**
**பாரில்நின் பாத மூலம் பற்றினேன் பரம மூர்த்தி**
**காரொளி வண்ண னேநற் கண்ணனே கதறு கின்றேன்**
**யாருளர் களைகணம்மா அரங்கமா நகரு ளானே."**

[*பாட்டு முடியும் தருணத்தில் கிருஷ்ணதேவ ராயர் வருகிறார். அவர் வருவதைக் கண்ட சின்ன தேவி பாட்டை நிறுத்திவிட்டுப் பரபரப்புடன் எழுந்து அவரை வணங்குகிறாள்.*]

*சக்கரவர்த்தி, ஜயவிஜயீபவ!*

[*சிறிது நேரம் ஒருவரும் மேலே பேசாமல் இருக் கின்றனர். பிறகு,*]

*தங்கள் முகம் ஏன் இப்படி வாட்டமுற் றிருக்கிறது?*

**கிருஷ்ண:** [*கண்களில் நீர் ததும்ப*] *சின்ன, ஏன் என்று கேட்கிறாயா? நீயே உன் நெஞ்சத் தைக் கேட்டுப் பார்.*

**சின்ன:** [ஒரு பெருமூச்சு விட்டு] மஹாப் பிரபு, நான் ஒன்றுக்கும் பற்ருதவள்.........

**கிருஷ்ண:** சின்ன, நீ இப்படிச் செய்வாய் என்று நான் கனவிலும் கருதவில்லை.

**சின்ன:** தாங்கள் அப்படிச் சொல்லலாகாது. சக்கரவர்த்தியாகிய தாங்கள்.........

**கிருஷ்ண:** வீணில் என் மனத்தை அலைக் காதே. அப்பாஜியிடம் நீ சொன்னது எவ்வளவு தூரம் என் மனத்தைப் புண்படுத்தியது என் பதை அறியாயா?

**சின்ன:** சக்கரவர்த்தி, மன்னிக்கவேண்டும். ராஜ்யத்தின் நலத்தையும் தங்கள் க்ஷேமத் தையுமே கருத்தில் கொண்டுதான், இந்த அடிமை......

**கிருஷ்ண:** என் அன்பே, ஆஹா......நீ செய் யப் புகும் தியாகத்தின் அளவை அறியமாட் டாய். எனக்காக நீ எல்லாச் சுதந்திரங்களையும் துறக்கச் சித்தமாக இருக்கிருய். இவ்வளவு பெருந்தன்மை உள்ள உன்னை என்னுல் எப்படிக் கைவிடமுடியும்? நீ என்னை இவ்விதம் ஒதுக்கி விடுவதற்கு நான் உனக்கு என்ன தீங்கு இழைத் தேன்?

**சின்ன:** [கண்களினின்றும் நீர் ஆருக ஒழுக, அரசர் அடியில் வீழ்ந்து] மஹாப்பிரபு, மன்னிக்க வேண்டும். இப்பொழுதுதான் உணர்ந்தேன், அது எவ்வளவு பெரிய துன்பம் என்பதை.

தங்கள் கண் கலங்கிக் காண ஒருநாளும் நான் சகியேன். கொடிய பாபத்தைச் செய்துவிட்டேன். ஏதோ அறியாமையால் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும்.

கிருஷ்ண: என்ன இது? சின்ஞ, எழுந்திரு.

சின்ஞ: [படபடப்புடன்] தங்களை விட்டுப் பிரிந்து என்ஞல் ஒரு கணமும் உயிர்வாழ முடியாது. இந்தக் கஷ்டத்தை என்ஞல் ஒருநாளும் சகிக்க முடியாது. என்னை அநாதையாக விட்டு விடாதீர்கள்; தங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிருஷ்ண: [குனிந்து அவளைத் தூக்கப் போகிருர்.] என்ன பேதைமை இது? எழுந்திரு.

சின்ஞ: தாங்கள் என்னை மன்னித்து, வாக்களிக்காவிட்டால் எழுந்திருக்கமாட்டேன். தாங்கள் என்னைக் கைவிடக்கூடாது.

கிருஷ்ண: [சக்கரவர்த்தி அவளைத் தூக்கித் தாங்கிப் பிடித்து இறுக அணைத்துக்கொண்டு] என் ஆருயிரே, உன்னை நான் எப்போதும் கைவிடமாட்டேன். உன்னை விட்டுப் பிரிந்து என்ஞல் உயிர்தரிக்க முடியாது. உன்னையன்றி வேறு யாரையும் நான் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டேன்.

சின்ஞ: [உணர்வை அடைந்து] ஆஹா! என் மடமைதான் என்ன! மஹாப்பிரபு, பெருந்தவறு இழைத்துவிட்டேன். பெண்மை

என்னைச் சிறிது காலம் அடிமைப்படுத்தி விட்டது. அதனால் உணர்வை இழந்து கூறினேன். மன்னிக்கவேண்டும். அப்பாஜி கூறுவது முற்றும் உண்மை. அந்தப் பதவியை அடைவதற்கு வேண்டிய குணங்களில் ஒன்றும் வாய்க்கப் பெருதவள்.

கிருஷ்ண: [திடுக்கிட்டு] என்ன, நீதான் கூறுகிருயா? சுய உணர்வுடன் இருக்கிருயா?

சின்னு: [சக்கரவர்த்தியின் பிடியினின்றும் விடுபட்டு விலகி நின்று] மஹாப்பிரபு, எனக்கு ஏற்பட்ட மயக்கம் தெளிந்துவிட்டது. தங்கள் நலத்தைவிட என்னுடைய சுகம் பெரிதன்று. மனப்பூர்வமாகக் கூறுகிறேன்.

கிருஷ்ண: எதை?

சின்னு: தாங்கள் தயவு செய்து திருமலாம் பாளை அங்கீகரித்துக்கொள்ளவேண்டும். அவள் மகா உத்தமி. தங்களுக்கு ஏற்ற தேவி. எந்த விதத்திலும் குறைவில்லாதவள். என்னைவிட எவ்வளவோ மேம்பட்டவள். அவளை நான் என் சகோதரிபோலவே பாவித்து வருகிறேன்.

கிருஷ்ண: [ஆச்சரியத்துடன்] ஓஹோ! நான் இந்தச் சாம்ராஜ்யப் பதவியை இழக்கவே நேரி டினும் உன்னை இழக்க முடியாது. இதை நிச்சயமாகக் கொள்.

சின்னு: மஹாப்பிரபு, அப்படியானுல் இந்த ஒரு வரத்தையாவது அளிக்கவேண்டும். நான்

எப்போதும்போலவே இருக்கிறேன். ஆனால் சக்கரவர்த்தினியாகத் தாங்கள் திருமலாம்பா தேவியை அங்கீகரித்துக் கொள்ளவேண்டும். இந்த வரத்தைத் தாங்கள் அளித்தே ஆக வேண்டும்.

கிருஷ்ண: [*சிறிது சந்தோஷத்துடன்*] நீயும் அப்பாஜியும் சேர்ந்து செய்த சூழ்ச்சியோ இது?

சின்ன: மஹாராஜா தவறாக எண்ணிவிடக் கூடாது. நாட்டின் நலத்தைக் குறித்த வேண்டு கோளே இது. திருமலாம்பாதேவி தங்களுடன் தங்கச் சிங்காதனத்தில் அமர்ந்திருப்பாள்; நான் தங்கள் ஹிருதயத்திலேயே வாஸம் செய்வேன்.

---

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, MYLAPORE, MADRAS.

# பரிசலோட்டி

*'சங்கரராம்'—13 கதைகள்*

(1) பரிசலோட்டி, (2) சுயம்வரம், (3) உபதேசம், (4) வீரமலையின் மதுவிலக்கு, (5) பொய்யும் நீதியாகும், (6) பயித்தியப் போக்கு, (7) ரத்த பாசம், (8) பணம் பாஷாணம், (9) வாய்க்கு எட்டியது, (10) ராணியின் வாக்கு, (11) கடவுளுக்கு வைத்தியம், (12) பொங்கல் பிரசாதம், (13) ஒருமார் பரங்கிக் கொடி.

கிராமமே நகர வாழ்க்கைக்குரிய சகல ஐசுவரியங்களையும் அளிக்கும் பெருநிதி என்பதையும், ஏழை உழவன் நெற்றி வேர்வை மண்ணில் விழ உழுது பயிரிட்டு நிலவரிப் பளுவைச் சுமந்து தங்களைப் போஷிக்கின்றான் என்பதையும் நவநாகரிகத்தில் ஆழ்ந்துள்ளவர் கணமேனும் சிந்திக்கிறார்களா? அவரைப் போன்ற எளியோரைப் பற்றிய - தொழிலாளிகளைப் பற்றிய - வாழ்க்கையை நேரில் கண்டு மனமுருகிய ஆசிரியர் சம்பாஷணையின் போதெல்லாம் அவர்கள் பேசும் பாஷையையே கைக்கொண்டு ரஸம் ததும்பும் இக்கதைகளை எழுதியுள்ளார்.

விலை ரூ. 1—8—0

# மண்ணாசை

*'சங்கரராம்'*

தமிழில் நல்ல நவீனங்கள் இல்லையென்று குறையுறுபவர்கள் வரவேற்பதற்குரியது இது. விவசாயிகளின் வாழ்க்கை மர்மத்தை அறிந்து அவர்களின் கஷ்ட சுகங்களில் ஈடுபட்டு, அவர்களோடு சேர்ந்துவாழ்வது நகரங்களிலிருந்து நாட்டாண்மை செலுத்துவோரின் கடமையாகும். இம்முயற்சியினால் சமூகத்திற்குச் சாந்தியும் சுகமும் ஏற்படும். இதுதான் இப்புத்தகத்தின் கருத்து.

"இந்தப் புத்தகத்தைப் படித்தபின் மண்ணாசை ரொம்ப நல்லது என்ற முடிவுக்குத்தான் நாம் வரவேண்டியிருக்கிறது. 270 பக்கங்கள் வாசித்தும் படிப்பதில் அலுப்பு ஏற்படுவதில்லை என்றால் ஆசிரியரின் கதை சொல்லும் திறமை எவ்வளவு என்று சொல்ல வேண்டுமா?" —'கல்கி'

விலை ரூ. 1—8—0